# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.98/2018 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா–03 (PW–03) |
| **பெயர்** | :– | வரதராஜன் |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு ஜுலைதிங்கள் 01 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

எதிரிகள் தோன்றினர். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:-**

நான் ஓமலூர் கோட்டமேட்டுப்பட்டி பிரிவில் வசிக்கிறேன். சேலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தபேதராக பணிபுரிகிறேன். 2006 ஆம் ஆண்டு ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்தேன். 2006 ஆம் ஆண்டு ஒரு நாள் வட்டாட்சியர் அழைத்தன்பேரில் அவருடைய வாகனத்தில் புளியம்பட்டி ஊருக்கு அருகிலுள்ள ஓர் இடத்திற்கு சென்றோம். வட்டாட்சியர், ஓட்டுநர், நான் ஆகியோர் சென்றோம். 30 அடிக்குமுன் வாகனம் நின்றது. நீங்கள் இங்கேயே நில்லுங்கள் என்று சொல்லிவிட்டு சென்றார். ஒரு மணிநேரம் கழித்து வந்தார். காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் என்ற ஆவணத்தில் என்னுடைய கையொப்பம் உள்ளது. அந்த கையொப்பத்தை எங்கு வைத்து போட்டேன் என்றும் எதற்காக போட்டேன் என்றும் எனக்கு நினைவில்லை. பார்வை மகசரிலுள்ள இந்த சான்றாளரின் கையொப்பம் **அ.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

10.02.2006 ஆம் தேதியன்று 12.00 மணி அளவில் புளியம்பட்டி ஊர் நாரணம்பாளையம் பிரிவில் உள்ள புல எண்.52 இல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்திற்கு வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலகர், கிராம உதவியாளர் உள்ளிட்ட நாங்கள் சென்றோம் என்றால் நான் அங்கு செல்லவில்லை. அரசு புறம்போக்கு நிலத்தில் சின்னதம்பி மகன் பழனிசாமி என்பவர் கள்ளதனமாக கல் வெட்டி விற்றார் என்று புலனாய்வின்போது சொன்னேன் என்றால் இல்லை. கல்லை வெட்டுவதற்கு கோவிந்தன் என்பவருக்கு

சொந்தமான துளைபோடும் இயந்திரம் இருந்தது என்றும் அதை பெருமாள் என்பவர் இயக்கி கொண்டிருந்தார் என்றும் அதை நான் பார்த்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. அங்கு 2 கிலோ வெடிமருந்தும் 16 தோட்டாவும் இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. அவற்றை வட்டாட்சியர் கைப்பற்றினார் என்றால் எனக்கு தெரியாது. அது சம்மந்தமாக வட்டாட்சியர் ஓமலூர் காவல் நிலையத்திற்கு புகார் அனுப்பினார் என்றால் அது எனக்கு தெரியாது. மறுநாள் ஓமலூர் காவல் ஆய்வாளர் அழைத்ததின் பேரில் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் இல்லை. என் முன்னிலையில் பார்வை மகசரும் மாதிரி வரைபடமும் தாயரித்தார் என்றால் இல்லை. புலனாய்வின்போது அரசு தரப்பு வழக்கை வலியுறுத்தி கூறிவிட்டு தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.